
சந்தான குரவர்களின் வரலாறு
கே. வி. குணசேகரம்

# சைவ சமய சந்தான குரவர்கள்

## அறிமுகம்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முதலான இருபத்தேழு ஆச்சாரியர்களால் பாடப்பெற்ற பாசுரங்கள் பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டன. நம்பியாண்டார் நம்பி அவற்றைத் தொகுத்துச் சைவ மக்களுக்கு அளித்தார். இவற்றைச் சைவசமய ஞானிகள் தோத்திரங்கள் என்று பெயரிட்டுப் போற்றிப் பாதுகாத்து வருகின்றனர். அதுபோல மெய்கண்டர் முதலிய ஆச்சாரியார்கள் அருளிச் செய்த பதின்நான்கு சைவசித்தாந்த நூல்களையும் சாத்திரங்கள் என்று சைவர்கள் அழைத்து அதையும் போற்றிக் காப்பாற்றி வருகின்றனர். இவை கடவுளைப் பற்றிய தெளிவான கருத்துக்களை மக்களுக்குத் தெரிவிக்கின்றன. கடவுளை மெய்யுணர்வால் அறிந்து இன்புறலாமே தவிரக் காண முடியாது. இதைத் திருவாசகத்தில் பல இடங்களில் மாணிக்கவாசக சுவாமிகள் கூறியுள்ளார்.

தேவாரத் திருப்பதிகங்கள் கடவுளான சிவபெருமானின் பெருமைகளையும் திருவிளையாடல்களையும் அவர் செய்த அற்புதங்களையும் கூறுகின்றன. அத்துடன் இனிமையான பாடல்களாகவும் இருப்பதால் படிப்போரினது மனதைக் கவர்ந்திழுக்கும் சக்தியுள்ளனவாகவும் இருக்கின்றன. மெய்கண்டர் முதலான ஆச்சாரியார்கள் பாடிய நூல்கள் சாத்திர நூல்களாகும். இவை வாழ்வியல் உண்மைகளை மக்களுக்கு விரிவாக எடுத்துக் கூறுகின்றன. ஒவ்வொருவரும் செய்யும் நல்வினை தீவினைகள் அவரவரை வந்து சேரும் என்ற உண்மையை இந் நூல்கள் மக்களுக்குத் தெளிவாகக் கூறுகின்றன. அது உடனே வரலாம். இல்லை வாழ்க்கையில் எப்போதென்றாலும் வரலாம் என்று கூறுகின்றன. இவை மக்களுக்கு எழும் சந்தேகங்களை நீக்கிச் சமய வாழ்வின் தத்துவங்களை வலியுறுத்துகின்றன.

நாயன்மார்களும், ஏனைய குரவர்களும் ஒவ்வொரு திருத்தலங்களுக்கும் சென்று அங்கு கோவில் கொண்டிருக்கும் சிவனையும் அம்மையையும், தலவரலாற்றையும், அதன் பெருமைகளையும், அழகையும் வெளிப்படுத்துகின்றனர். ஆனால் சந்தான குரவர்கள் தலங்களுக்குச் செல்லாது தாம் இருந்த இடங்களில் இருந்து கொண்டு அனைத்தையும் ஞானக் கண்ணால் கண்டு மெய்ப்பொருளை உணர்ந்து அவற்றைத் தமது சீடர்களுக்கு உபதேசித்தனர்.

நாயன்மார்களான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகியோரை சமயக் குரவர்கள் என்றும், மெய்கண்டதேவர். அருள்நந்தி சிவாச்சாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார் ஆகிய நால்வரையும் சந்தானக் குரவர் என்றும் சைவசமயத்தினர் போற்றுகின்றனர்.

சந்தானம் என்பது ஆண்களின் மரபைக் குறிக்கும். ஒரு தந்தைக்கு மகன்தான் வாரிசாக அமைவான். மகள் இன்னொருவனுக்கும் அவனது குடும்பத்திற்கும் வாரிசாகி விடுவதால் அவளை மரபில் சேர்ப்பதில்லை. அது போலச் சைவ மரபைக் காத்து வருபவர்களையும் சந்தானம் என்பர். அது ஞானசம்பந்தரில் தொடங்கி வழிவழி வாரிசாகக் கயிலாய பரம்பரையில் சிவஞான உபதேசத்தை வெளிப்படுத்திச் சைவ சமய மரபைக் காத்து வருபவர்களையும் சந்தானம் என்பர். இதை நந்திமரபு என்றும், மெய்கண்ட சந்தானம் என்றும் அழைப்பர்.

கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டு முதல் தமிழ் நாட்டில் மெய்கண்ட சந்தான பரம்பரை சிவனருளால் தோற்றம் பெற்றது. சிவபெருமான் திருக்கைலாயத்தில் சைவசித்தாந்தத்தை நந்தியெம் பெருமானுக்கு உபதேசிக்க, அவர் சனற்குமாரருக்கு உபதேசித்தார். சனற்குமாரர் சத்திய ஞானதரிசிகளுக்கு உபதேசிக்க அவர் பரஞ்சோதி முனிவருக்கு உபதேசித்தார். அதனால் இந்நால்வரும் அகச் சந்தான குரவர் என அழைக்கப்பட்டனர்.

அகச்சந்தான குரவரான பரஞ்சோதி முனிவர் ஒருநாள் திருக்கைலாயத்தில் இருந்து விண்வழியாகப் பூவுலகிற்கு வந்தார். அவ்வாறு வரும் போது, திருவெண்ணெய் நல்லூரில் வசித்து வரும் சுவேதப் பெருமாள் என்ற இரண்டு வயதுக் குழந்தையைக் கண்டு, அந்த ஞானக் குழந்தையின் பக்குவத்தை உணர்ந்து கீழே இறங்கி வந்து அதற்குச் சிவஞான உபதேசத்தைச் செய்தருளினார். பின் தனது குருவான சத்தியஞான தரிசனி என்ற பெயரைத் தூய தமிழில் மெய்கண்டார் என்று ஆக்கி அக் குழந்தைக்குச் சூட்டினார். அதன் பின் மெய்கண்டதேவர், அருள்நந்திசிவாச்சாரியாருக்கும், மறைஞான சம்பந்தருக்கும், உமாபதி சிவாச்சாரியாருக்கும் சிவஞான உபதேசம் செய்தருளினார். இந் நால்வரும் புறச்சந்தான குரவர் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் நால்வரும் சைவசமயத் தத்துவங்களை வரையறுத்து, சிவஞானபோதம் முதலான சாத்திர நூல்களை அருளிச் செய்தனர்.

# ஸ்ரீ மெய்கண்ட தேவர்

## தோற்றம்

திருமுனைப்பாடி என்ற நாடு நடுநாடு என்று அழைக்கப்படுகிறது. இந் நடு நாட்டிலே திருபெண்ணாகம் என்ற சிறப்பு மிக்க சிவத்தலம் ஒன்றுள்ளது.

திருப்பெண்ணாகத்தில் வாழ்ந்து வந்த அச்சுதக்களப்பாளர் என்ற சிவபக்தர் திருமணம் செய்து பல ஆண்டுகள் கடத்தும் புத்திரபாக்கியம் இல்லாமையால், திருத்துறையூரில் வசித்து வந்த தனது குல குருவாகிய சகலாகமபண்டிதரிடம் தனது மனைவியுடன் சென்று, அவரை வணங்கி,''சுவாமி, எனக்குப் பிள்ளையில்லாத குறை இருப்பது தங்களுக்குத் தெரியும். அதனால் பெருந்துன்பப்படுகிறேன். அக் குறையைத் தாங்கள் நீக்கிவைக்க வேண்டும். அத்துடன் சைவசமயத்தை மேலோங்கச் செய்யும் புத்திரனை நான் பெற அருளுங்கள்'' என்று மனமுருகி வேண்டினார் அவரின் பெருந்துயரை நீக்கத் திருவுளம் கொண்ட அவரது குரு சிவனைத் தொழுதுவிட்டுக் கயிறுச் சாத்திரம் பார்த்தார். அப்போது திருஞானசம்பந்தர் அருளிய திருவெண்காட்டுத் திருத்தலப் பதிகத்தில் உள்ள,''பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு'' என்ற தேவாரத் திருப்பதிகம் வந்தது. இத்தேவாரத்தில், திருவெண்காட்டு இறைவனாகிய சுவேதவனப் பெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோவிலில் அமைந்திருக்கும் முக்குள நீரில் நீராடி இறைவனைத் தினமும் அன்போடு வழிபட்டு வந்தால், நினைத்தவை நடக்கும். புத்திரபாக்கியம் கட்டாயம் கிடைக்கும். சந்தேகப்பட வேண்டாம் என்ற குறிப்பும் இருந்தது. அதன்படி அச்சுதக் களப்பாளர் தனது மனைவியுடன் திருவெண்காடு சென்று, அங்கே உள்ள சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், அக்கினி தீர்த்தம் ஆகிய முக்குளங்களிலும் தினமும் நீராடிச் சுவேதவனப் பெருமானைப் பேரன்புடன் வழிபட்டு வந்தனர். அவர்களிருவரும் மிக்க நம்பிக்கையுடன் நாற்பத்தெட்டுத் தினங்கள் அந்த முக்குளங்களிலும் நீராடினர்.

அச்சுதகளப்பாளரது பக்தியால் மனமிரங்கிய சிவபெருமான் ஒருநாள் அவரின் கனவில் தோன்றி,''அடியவனே என்மீது பேரன்பு பூண்டு என்னைப் பேரன்புடன் தொழுது வருகிறாய். இருப்பினும் விதிப்படி உனக்கு இந்தப் பிறவியில் புத்திரப்பேறு இல்லை''. என்று அருளி மறைந்தார். இதனைக் கேட்ட அச்சுதகளப்பாளர் மிகுந்த துன்பம் அடைந்து கண்ணீர் விட்டு நெடுநேரம் வரை அழுதார். பின்பு சிவபெருமான் தனது கனவில் தோன்றியமைக்காக மிகவும் மகிழ்ந்தார். அத்தரிசனம் கிடைத்தற்கரியது என்று நினைத்தார். அத்துடன் திருஞானசம்பந்தரின் வாக்குப் பொய்க்காது இது இறைவனின் திருவிளையாடல் என்று நினைத்து மனங்கலங்காது அத்திருத்தலத்திலேயே தங்கியிருந்தார். அம்மையின் ஞானப்பாலை உண்ட சம்பந்தர் அருளால் மூன்று வயதில்

தேவாரம் பாடியமையையும், அவர் சிவனின் அருளால் பல அற்புதங்களை நிகழ்த்தியமையையும் நினைத்தார். சம்பந்தரது தேவாரத்தின் வாக்கைப் பொய்யாகக் கூடாதென்பதற்காகவாவது சிவன் மனம் மாறுவான் என நம்பினார். நாள் செல்லச் செல்ல அந் நம்பிக்கை வலுப்பெற்றது. அதனால் மனம் இரங்கிய சிவபெருமான் மீண்டும் அவரது கனவில் தோன்றி, ‘‘அன்பனே இப் பிறவியில் உனக்குப் புத்திரப்பேறு கிடையாது. ஆனாலும் நீ ஞான சம்பந்தனின் தேவாரத்தில் கொண்ட நம்பிக்கை காரணமாகவும், தமிழ்மறையதன தேவாரங்களின் மேன்மை விளங்கவும், சம்பந்தனின் வாக்குச் சத்தியவாக்கு என்பதை உறுதி செய்யவும், சைவசமயம் தழைத்தோங்கவும், உமது நம்பிக்கையையும், வலிமையான பக்தியையும் மதித்து ஞானசம்பந்தனைப் போன்ற ஒரு புதல்வனை உமக்கு அளிக்கிறோம்’’ என்று அருளி மறைந்தார்.

அதைக் கேட்ட அச்சுதக்களப்பாளர் மிக்க மகிழ்வுடன் சிவனைத் தொழுதார். திருஞானசம்பந்தரைப் போன்ற ஒரு பிள்ளை தனக்குச் கிடைக்கப் போகிறான் என நினைத்துப் பேரானந்தமடைந்தார். அவரது மனைவியும் மிக்க மகிழ்ச்சியடைந்தாள். சிவனின் அருளால் தமக்குப் பிள்ளையில்லாக் குறை நீங்குவதோடு பெரும் ஞானப் பிரகாசமுள்ள ஒரு பிள்ளை தமக்குக் கிடைக்கப் போகிறது என்றெண்ணி இருவரும் மேலும் சிலநாட்கள் அங்கு தங்கியிருந்து முக்குளநீரில் நீராடி, சுவேதவனப் பெருமானை வழிபட்டு விட்டுத்தமது, சொந்த ஊரான திருப்பெண்ணாகத்திற்குத் திரும்பினார்.

‘‘நல்வியாதமுனி உரை செய் சூத்திரத்தின்
பாடியமோர் நான்கும் கொண்ட சொல்
வாய்மை பொருள் வாய்மை தெளிதலுற்ற
தோராது சோக முற்றோர் எல்லாரும்
அத்துவித சுத்த நிலை
இனிது எய்திச் சோகமேயப் பொல்லாத
சமயிகளும் அதிசயிப்பப்
புவனி மிசைப் போதம் ஏற’’

என்று சந்தானச்சாரியார் புராணச் செய்யுள் மெய்கண்டதேவரின் அவதாரச் சிறப்பைக் கூறுகிறது. அது அவர் சைவசமயத் தத்துவங்களை யெல்லாம் ஆராய்ந்து, பிறசமயங்களின் நிலையையும் விளக்கி, அவற்றை மக்கள் அறிவதற்காகச் ‘சிவஞானபோதம்’ என்னும் மெய்ஞ்ஞான நூலை அருளிச் செய்து, அதன் கருத்துக்களைப் பொழிப்புரையாக விளக்கி மக்களுக்கு அளிக்கவே மெய்கண்டதேவர் அவதரித்தார் என்று மேற்கூறிய சந்தனாச் சாரியாரின் புராண உரை கூறுகிறது.

குறித்த நாளில் அச்சுதக்களப்பாளருக்கு ஓர் அரியமைந்தன் பிறந்தான். பெற்றோர் அளவில்லாத மகிழ்வுடன் தாங்கள் பிரார்த்தனை செய்த தலங்களுக்கெல்லாம் சென்று வணங்கினர். அவர்கள் திருவெண்காட்டில் உள்ள தலத்திற்கு வந்தனர். அங்கு கோவில் கொண்டிருக்கும் சுவேதவனப் பெருமானே இப்பிறப்பில் குழந்தைப் பாக்கியமில்லாத தமக்குக் குழந்தையை அருளியது என நினைத்து, சுவேதவனப் பெருமானை மனமுருகி வணங்கி அவரது பெயராகிய ‘சுவேதவனப் பெருமான்’ என்பதைத் தமது பிள்ளைக்கும் சூட்டி மகிழ்ந்தனர்.

சுவேதவனப் பெருமானுக்கு இரண்டு வயது முடிந்த போது அவனது தாயும் தந்தையும் இறந்து விட்டனர். அதன் பின் அவன் தனது தாய் மாமனால் திருவெண்ணெய் நல்லூருக்கு எடுத்துச் செல்லப்பட்டான். இவனது மாமனாரான வெண்ணெய் நல்லூர் காங்கேய பூபதி அவரை மிக்க அன்புடன் வளர்த்து வந்தார். குழந்தைப் பருவத்திலேயே அவர் சரியை கிரியை யோகங்களை முறையாகக் கடைப்பிடித்தார். முற்பிறவியில் செய்த தவத்தினால் பிறக்கும் போதே பூரணமான ஞானத்துடன் பிறந்தார். இவ்வாறானவர்கள் மோட்சத்தையே விரும்பும் ஞானிகளாவர். அதனால் அவர் சாமுசித்தராக விளங்கினார். சாமுசித்தர்களுக்குச் சிவபெருமான் நேரில் தோன்றி அனுக்கிரகம் சொய்வதால் ஞானநூல்கள் யாவும் சிவனின் அருளால் அவர்கள் புரிந்து கொள்வர்.

திருநந்திதேவர் பரம்பரையில் வந்த பரஞ்சோதி முனிவர் ஒருநாள் திருக்கைலாய மலையில் இருந்து பொதிகை மலைக்கு அகத்திய முனிவரைச் சந்திப்பதற்காகச் ஆகாய மார்க்கமாகச் சென்று கொண்டிருந்தார். அவர் சென்ற விமானத்தின் நிழல் திருவெண்ணெய் நல்லூரில் விளையாடிக் கொண்டிருந்த இரண்டு வயதுப் பாலகனான சுவேதவனப் பெருமான் மீது பட்டது. பட்டதும் பரஞ்சோதி முனிவர் பயணித்த விமானம் அந்த இடத்திலேயே அசையாது நின்றுவிட்டது.

பரஞ்சோதி முனிவர் சிவனை நினைத்துக் கண்களை மூடினார். அப்போது அவருக்கு விமானம் நின்றதன் காரணம் புரிந்தது. சிவனின் அருளால் திருவெண்ணெய் நல்லூரில் தன்னால் ஆட்கொள்ளப்பட வேண்டிய ஒருவர் இருக்கிறார் என்பதை உணர்ந்து கீழே இறங்கி வந்தார். அங்கே ஞானஒளியுடன் நின்ற இரண்டு வயதான குழந்தையைக் கண்டார். அதன் முகத்தில் இருந்து எழுந்த ஒளி அவரைக் கவர்ந்தது. அதனால் தனது அருட்பார்வையால் சட்சு தீட்சை அளித்துத் தான் தன்னுடைய குருவின் மூலம் பெற்ற சிவஞானபோதத்தை ஞான உபதேசமாகச் செய்து வைத்தார். பின்அக்குழந்தைக்குத் தனது குருவின் பெயரான சத்தியஞான தரிசினியில் திருப்பெயரைத் தமிழில் அதைக் குறிக்கும் மெய்கண்டன் என்ற திருப்பெயரை அக்

குழந்தைக்குச் சூட்டினார். பின் அவரைத் தனது மாணவராக ஏற்று ஆசி வழங்கிவிட்டு மறைந்து போனார்.

மெய்கண்டர் அதன்பின் யாரோடும் பேசாது மௌனமாக வாழ்ந்து வந்தார். ஒருநாள் அவர் திருவருட்துறையில் வீற்றிருக்கும் பொல்லாப் பிள்ளையார் கோவிலுக்கு வந்து பிள்ளையாரது திருவுருவின் முன் அமர்ந்து கொண்டார். அத்துடன் அவரைத் தனது ஞானகுருவாகவும் ஏற்றுக் கொண்டார் பொல்லாப் பிள்ளையாரின் அருளால், தமிழ் இலக்கண இலக்கியங்களையும், வடமொழியில் உள்ள வேதங்களையும் ஆகமங்களையும் கற்றுணர்ந்தார். அத்துடன் சைவசமயத் தத்துவங்களையும், திருமுறைகளையும் கற்றுத் தேர்ந்தார். அவர் திருவைந்தெழுத்தை இடைவிடாது சிவஞானபோதம் அருளல் ஓதிக் கொண்டிருந்தார்.

**சிவஞானபோதம் உருவாதல்** அப்போது அவரது மனதில் அவரது குருவான பரஞ்சோதி முனிவர் உபதேசித்த சிவஞானபோதத்தைத் தமிழில் உருவாக்கும் எண்ணம் அரும்பியது. இறைவனாலும் குருவாலும் உபதேசிக்கப்பட்ட சிவஅனுபவத்தை எழுதினார். உலகம் உய்யும் பொருட்டுச் சிவஞானபோதம் என்ற சைவசித்தாந்த சாத்திரநூல் வார்த்திகம் பொழிப்புரையுடனும், தமிழ்ச் செய்யுள்களுடனும் உருவானது. சைவமக்கள் உண்மையான சைவ உணர்வுடன் அவரை நாடிச் சென்று அவரிடம் சைவசித்தாந்தக் கருத்துக்களை அறிந்து கொண்டனர். பன்னிரண்டு சூத்திரங்களினால் ஆக்கம் பெற்ற சிவஞானபோதத்தின் நுண்பொருளைக் கேட்டுத் தெளிந்தவர்கள் நாற்பத்தொன்பது மாணவர்களாவர்.

## சகாலாகமபண்டிதர் சீடராதல்

மெய்கண்டதேவரின் தந்தைக்குக் குலகுருவாக இருந்தவர் சகலாகம பண்டிதர். அதனால் மெய்கண்டதேவர் தனது குலகுருவான தன்னைச் சந்திக்க வராமையால் கவலையுற்றுத் தனது மாணவர்களுடன் திருவெண்ணெய் நல்லூருக்கு வந்து மெய்கண்டர் தன்னை வந்து சந்திக்கட்டும் எனக் காத்திருந்தார். மெய்கண்டர் வரவில்லை. அதனால் அவர் தனது மாணவர்களுள் ஒருவனை அனுப்பி மெய்கண்டர் வராமைக்குரிய காரணத்தைத் தெரிந்து வருமாறு அனுப்பினார்.

மெய்கண்டர் சிவஞானபோதத்தைத் தனது மாணவர்களுக்கு அப்போது உபதேசித்துக் கொண்டிருந்தார். பண்டிதர் அனுப்பிய மாணவன் அப்போதனையைக் கேட்டு மெய்மறந்து அதைக் கேட்டுக் கொண்டிருந்தான். தான் அனுப்பிய மாணவன் திரும்பிவராமையால் பண்டிதர் இன்னொரு மாணவனை அனுப்பினார். அவனும் சிவஞானபோத உபதேசத்தில் கட்டுண்டு எல்லாவற்றையும் மறந்து விட்டான். இதன் பின்

ஒவ்வொருவராக ஏனையமானவர்களையும் அனுப்பிய போது அவர்களும் சிவஞானபோத உதேசத்தைக் கேட்டுக் கொண்டிருந்தனரே தவிரத் திரும்பிவரவில்லை.

அதனால் மிகுந்த குழப்பமடைந்த பண்டிதர் தாமே புறப்பட்டு மெய்கண்டர் சிவஞானபோதத்தை உபதேசித்துக் கொண்டிருக்கும் இடத்திற்கு வந்தார். வந்த அவர் தான் மெய்கண்டாருக்கு குருவாகையால் மெய்கண்டர் தன்னை வணங்கி வரவேற்று உபசரிக்க வேண்டும் என்ற அகந்தையில் மெய்கண்டருக்கு முன்பாக உலாவிக் கொண்டிருந்தார்.

அவர் உலாவிக் கொண்டிருந்த போது மெய்கண்டர் தனது மாணவர்களுக்கு ஆணவத்தைப் பற்றிப் போதித்துக் கொண்டிருந்தார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த சகலாகமபண்டிதர் கோபத்துடன் வந்து மெய்கண்டரின் முன்நின்று, ‘‘நீ ஆணவத்தின் இயல்புகள் பற்றிப் போதிக்கிறாய். அதன் இயல்பு என்ன என்பதை எனக்குச் சொல்’’ என்று அகந்தையுடன் கேட்டார்.

அதைக் கேட்ட மெய்கண்டர் எதுவும் பேசாது சகலாகமபண்டிதரை அருளோடு பார்த்து, அவரது உள்ளத்தில் படிந்துள்ள ஆணவமாகிய அழுக்கை அடியோடு அகற்றுவதற்காக அருட்பார்வையைத் தொடர்ந்து யார்த்தார். பின், தனக்கெதிரே அகந்தையுடன் நின்று கொண்டிருந்த சகலாகமபண்டிதரை நோக்கித் தனது சுட்டுவிரலை நீட்டினார். ஆணவத்தின் நிலையைத் தனது சுட்டுவிரலால் உணர்த்தியதை உணர்ந்த சகலாகமபண்டிதரின் மெய்சிலிர்த்தது. அதனால் சகலாகமபண்டிதர் தன்னை மறந்து மெய்கண்டரின் திருவடியைப் பணிந்தார். அதன் பின் அவர் மெய்கண்டாரைக் குருவாக ஏற்று உபதேசம் பெற்றார். அவரே மெய்கண்டரிடம் உபதேசம் பெற்று அருளாளரான முதல் மாணாக்கராவார்.

மெய்கண்டதேவர். தனது முதல் மாணவராகிய சகலாகமபண்டிதருக்கு ‘அருணந்தி சிவம்’ என்று தீட்சா நாமமிடு. அவருக்குச் சைவசித்தாந்தத்தை உபதேசித்தார். தன்னிடம் உபதேசம் பெற வந்த தகுதியானவர்க்கெல்லாம் மெய்கண்டர் சைவசித்தாந்தத்தை உபதேசித்தார். தனக்குப் பின்பு சந்தான பரம்பரையின் வாரிசாக அருநந்தி சிவாச்சாரியாரை நியமித்து அவரை அதற்கு ஆசிரியராக்கினார். அருநந்தி சிவாச்சாரியார் சிவஞானபோதத்திற்கு உரைநூலாக சிவஞானசித்தியார் என்ற அரிய சித்தாந்த நூலை எழுதினார். இவ்வாறு சந்தானப் பரம்பரையை உருவாக்கி அரிய சித்தாந்த நூல்களை உருவாக்கக் காரணமாக இருந்த மெய்கண்டதேவர் ஐப்பசி மாத சுவாதி நன்நாளில் சிவபதம் அடைந்தார்.

## மெய்கண்டதேவரின் குடும்பம் பற்றி ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்கள்

அச்சுதக்களப்பாளர் பெண்ணாகடத்தில் ஒரு சிற்றரசர். இவரது மனைவி மங்களாம்பிகை. மங்களாம்பிகை கம்பர் இராமாயணத்தை எழுதத் துணையாக இருந்த சடையப்ப வள்ளலின் மகனாகிய காங்கேய பூபதியின் தங்கை. அச்சுதக்களப்பாளர் சோழ மன்னனான கோப்பெரும் சிங்கனின் மகளைத் திருமணம் செய்தவர். திருமணமாகிப் பத்து வருடங்கள் கழிந்தும் அவர்களுக்குப் பிள்ளைகள் பிறக்கவில்லை. பின் குலகுருவின் அருளால் மெய்கண்டர் பிறந்தார். பாண்டிய அரசன் சுந்தரபாண்டியன் கி.பி 1262 இல் சோழனை எதிர்த்துப் போர் செய்த போது அச்சுதக்களப்பாளர் கொல்லப்பட்டார். அதனால் அவரது மனைவியான மங்களாம்பிகை உடன்கட்டை ஏறினாள். அப்போது இரண்டு வயதாக இருந்த மெய்கண்டரை அவரது தாய் மாமனான காயிலாய பூபதி திருவெண்ணெய் நல்லூருக்கு அழைத்துச் சென்று வளர்த்தார்.

மெய்கண்டரது காலம் கி.பி 1230 இருந்து கி.பி 1280 வரையாகும். இத்தகவல் உமாபதி சிவாச்சாரியார் எழுதிய சங்கற்ப நிராகரம் என்ற நூலில் உள்ளது. இவை என மெய்கண்டதேவரின் குடும்பத்தினர் பற்றி ஆராய்ச்சியாளர்கள் கூறியவை.

## ஸ்ரீமெய்கண்டார் துதி

பண்டை மறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகதம் பரந்து நாறக்
கண்டவர் இதய கமல முகைகள் எல்லாம்
கண் திறப்பக் காசினிமேல் வந்த அருட் கதிரோன்
விண்ட மலர்ப் பொழில் புடை சூழ் வெண்ணை மேவும்
**மெய்கண்டதேவன்** மிகு சைவ நாதன்
புண்டரிக மலர் தாழச் சிரத்தே வாழும்
பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வாம்.

## ஸ்ரீ அருநந்தி சிவம்

தமிழ்நாட்டின் ஒரு பகுதியான நடுநாட்டில் பெண்னகை யாற்றின் வடகரையில் உள்ள திருத்துறையூர் என்ற தலத்தில் இவர் தோன்றினார்.

இவரது இயற்பெயர் சதாசிவ சிவாச்சாரியார் என்பதாகும். இவர் ஆதிசைவ மரபிலே தோன்றியமையால் இறைவனுக்குப் பூசை செய்யும் பெருநிலையைப் பெற்றவர். இவர் சுந்தரமூர்த்தி நாயனாருக்குப் பெண் கொடுத்த சங்கவி சிவாச்சாரியாரின் மரபைச் சார்ந்தவர்.

சதாசிவாச்சாரியாருக்குப் பெற்றோர் உரிய வயதில் உபநயனம் செய்தனர். அத்துடன் சமய தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை ஆகியவற்றையும் செய்து வைத்தனர். அத்துடன் ஆசாரிய அபிடேகமும் செய்தனர். வேதங்களையும் ஆகமங்களையும் நன்கு கற்றுத் தேர்ந்ததால் சகலாகம பண்டிதர் என்று அறிஞர்களால் போற்றப்பட்டவர். இவர் சகலகலைகளிலும் வல்லவராக இருந்தமையால் வேளாள மரபினர் இவரைக் குருவாக ஏற்றனர். அதனால் வேளாள மரபினருக்கு வழிவழியாக இவர் குலகுருவாக இருந்து வந்தார்.

திருப்பெண்ணாகத்தில் வசித்து வந்த அச்சுதக்களப்பாளருக்கு நீண்டகாலமாகப் பிள்ளை பிறக்கவில்லை. அதனால் தமது குருவான சகலாகம பண்டிதரிடம் வந்து தனது குறையைச் சொல்லி அழ, சகலாகம பண்டிதர் அதற்கான வழியைக் கூறினார். அதன்படி அச்சுதகளப்பாளர் திருவெண்காட்டுக்குச் சென்று அங்குள்ள முப்பெரும் ஏரியில் நீராடி இறைவனை வணங்கியதால் தான் மெய்கண்டர் பிறந்தார். அதற்குச் சகலாகமபண்டிதரே வழிகாட்டியாக இருந்தார். அதனால் மெய்கண்டதேவரின் அவதாரத்திற்குச் சகலாகம பண்டிதரே மூல காரணமாக இருந்தவர்.

இரண்டு வயதில் மெய்கண்டர் சிவஞானம் பெற்றமையும், அப்படிப் பெற்ற பின்குலகுருவாகவும் மெய்கண்டர் பிறப்பதற்குக் காரணமாகவும் இருந்த தன்னை மெய்கண்டர் வந்து சந்தித்து ஆசிபெறவில்லை என்பதும் சகலாகம பண்டிதருக்கு ஆத்திரத்தைக் கொடுத்தது. அத்துடன் மெய்கண்டர் குழந்தையாக இருந்து கொண்டு சைவசித்தாந்தத்தைத் தனது மாணவர்களுக்கு உபதேசித்தமையையும் அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அதனால் அவர் மெய்கண்டர் மீது கடுங்கோபம் கொண்டார்.

அதனால் அவர் பல்லக்கில் ஏறி திருவெண்ணெய் நல்லூரை அடைந்தார். அவர் வந்ததை அறிந்த மக்கள் வீதிகளைத் துப்பரவு செய்து வாழை கமுகு போன்றவற்றை நட்டு மகாதோரணங்கட்டி. வீட்டு வாசல்கள் தோறும் பூரண கும்பம் வைத்து மங்கள வாத்தியங்களை இசைத்துப் பெரு மகிழ்வுடன் அவரை வரவேற்றனர்.

ஊர் பெரும் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் இவை எதையும் அறியாத மெய்கண்டர் தமது மாணவர்களுக்குச் சிவஞானபோதத்தை உபதேசித்துக் கொண்டிருந்தார். மாணவர்கள் மெய் மறந்து அதைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

இசைக்கருவிகளின் ஒலிவானைப் பிளந்தது. மக்கள் குதூகலத்துடன் அவரை வாழ்த்தினர். இவை எதையும் கவனிக்காது மெய்கண்டர் சிவஞானபோதத்தில் தனது கவனத்தை வைத்திருந்தார்.

சகலாகம பண்டிதர் மெய்கண்டர் உபதேசிக்கும் இடத்திற்கு சென்று அதற்கு அண்மையில் வந்து தங்கினார். பின் தனது மாணவன் ஒருவனை அழைத்து, ‘‘மெய்கண்டனின் குலகுருவான சகலாகமபண்டிதன் வந்திருக்கிறார். அவர் உங்களை அழைக்கிறார் என்று கூறி அவரை அழைத்து வாருங்கள் என்றார். சென்ற மாணவன் வெகுநேரமாகியும் வராததால் இன்னொரு மாணவனை அனுப்பினார். இவ்வாறுஒருவர் பின் ஒருவராகப் பலரை அனுப்பியும் யாரும் திரும்பிவரவில்லை. அதன் பின் அனுப்புவதற்கு யாரும் இல்லாமையால் சகலாகம பண்டிதர் தாமே புறப்பட்டுச் சென்று மெய்கண்டர் உபதேசம் செய்யும் இடத்தை வந்தடைந்து மெய்கண்டரின் முன் கம்பீரமாக நின்றார். அதை மெய்கண்டர் கவனிக்காது மாணவர்களுக்கு ஆணவத்தின் தன்மையைப் பற்றி விளக்கிக் கொண்டிருந்தார்.

குலவழக்கப்படி ஒருவன் குலகுருவைத் தேடிச் சென்று அவரை வணங்கி ஆசி பெறல் வேண்டும். அதை மெய்கண்டன் செய்யவில்லை. அதைவிடக் குலகுருவைக் கண்டதும் என்ன வேலை செய்தாலும் சரி அதை விட்டுவிட்டு எழுந்து குருவுக்குரிய வணக்க முறைகளைச் செய்தல் வேண்டும். அதையும் செய்யாது என்னை இகழ்கிறான் என்று நினைத்துச் சகலாகமபண்டிதர் கோபத்தால் தன்னை மறந்தார். மிகந்த கோபத்துடன் மெய்கண்டாரை நோக்கி, ‘‘இப்போது நீ உனது மாணவர்களுக்கு உபதேசித்துக் கொண்டிருக்கும் ஆணவத்தன் சொரூபம் எது என்று சொல் பார்ப்போம்’’ என்றார்.

அதனால் அங்கு உபதேசித்ததைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் திகைத்தனர். சகலாகம பண்டிதர் சைவசித்தாந்தத்தைக் கற்றுத் தெளிந்த ஞானி அவர் கோபப்பட்டால் விபரீதம் நடந்துவிடும் எனப் பயந்தனர். மெய்கண்டர் பதட்டப்படாது சகலாகமபண்டிதரைப் புன்சிரிப்போடு பார்த்தார். பின் தனது சுட்டுவிரலால் அவரைச் சுட்டிக் காட்டினார். அது ஆணவதின் கொடுரம் நீதான் என்று சொல்லாமல் சொன்னது. அதை உணர்ந்த சகலாகம பண்டிதர் நடுநடுங்கினார். பயந்தார். மெய்கண்டரது அருட்பார்வை சகலாகமபண்டிதரின் மனதுள் தெளிவாகப் புகுந்து பிரகாசித்தது. அதனால் அவரது மனதை மூடியிருந்த அஞ்ஞான இருளான ஆணவம் அழிந்தது. அதனால் அவரது உள்ளத்தில் மெய்ஞ்ஞான ஒளி எழுந்தது. உண்மையை உணர்த்த சகலாகமபண்டிதர் மெய்கண்டரின் பாதங்களைப் பற்றி,‘‘சுவாமி, அறியாமையால் நான் என்னை இழந்து சிவத்துரோகத்தைச் செய்துவிட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்’’ என்று கண்ணீர் விட்டார்.

சகலாகம பண்டிதரின் ஆணவம் அகன்றுவிட்டதை உணர்ந்த மெய்கண்டர் கண்களால் அருட்பார்வை பார்த்து சட்சுதீட்சையும், திருவடித் தீட்சையும் அளித்தார். அதனால் சகலாகம பண்டிதர் மெய்யுணர்வு பெற்றார். அதன் பின் மெய்கண்டர் சகலாகமபண்டிதருக்கு 'அருள்நந்தி' என்ற தீட்சா நாமத்தை அளித்து, சிவஞானபோதத்தின் மெய்ப்பொருளை விரிவாக எடுத்துரைத்தார். வரும் போது குலகுரு என்ற ஆணவத்துடன் வந்த சகலாகம பண்டிதர், மெய்கண்டரைக் கண்டு, ஞானதீட்சை பெற்று அருள்நந்தி யென்ற சிறப்புப் பெயருடன் மெய்கண்டரின் முதல் சீடரானார்.

## அருள்நந்தியின் சாத்திர நூல்கள்

### 1. சிவஞான சித்தியார்

மெய்கண்டரால் ஞானம் பெற்ற அருள்நந்தி சிவாச்சாரியார் இரண்டு சைவசித்தாந்த தத்துவ நூல்களை இயற்றினார். மெய்கண்ட சாத்திர நூல்கள் பதின்நான்கு. அவற்றில் சிவஞானபோதத்திற்கு விரிவுரையாக அமையப் பெற்றது சிவஞானசித்தியார் ஆகும். இது புறச்சமயம் மறுக்கும் பரபக்கத்தையும் அகச்சமயம் விளக்கும் சுபபக்கத்தையும் விளக்குவதாக உள்ளது. இதைச் சிவஞானக் களஞ்சியம் என்று சைவசித்தாந்த ஆச்சாரியர்கள் சொல்லி மகிழ்வர்.

இதைத் தாயுமானவர்,

"பாதி விருத்தத்தால் இப்பார் விருத்தம் ஆக உண்மை
சாதித்தார் பொன் அடியைத் தாள் பணிவது எந்நாளோ"

என்றும்,

"பார்விரித்த நூல் எல்லாம் பார்த்தயிற் சித்தியே
ஓர் விருத்தப் பாதி போதும்"

என்று தருமை ஆதீன குரு முதல்வராக இருந்த ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிய பரமாச்சாரியார் கூறுகிறார்.

### 2. இருபா இருப்.்.து

இதுவும் சாத்திர நூலாகும். இது கேள்விப் பதிலாக அமைந்துள்ளது. ஒருவர் தனது சந்தேகத்தைக் கேள்வியாகக் கேட்க குரு அதற்குப் பதில் அளிக்கிறார். இதனால் சித்தாந்த தத்துவம் விளக்கப்படுகிறது. சிறந்த இரு நூல்களைத் தந்த அருணந்தி சிவாச்சாரியார், தனது மாணவர்களுள் சிறந்தவராகக் காணப்பட்ட மறைஞானசம்பந்தர்

என்பவருக்கு ஞானஉபதேசம் செய்து, தமக்குப் பின் அவரைச் சந்தான வாரிசாக நியமித்தார்.

அதன்பின் ஞான உபதேசம் செய்த அருணந்தி சிவாச்சாரியார் புரட்டாதி மாதம் பூர நன்நாளில் சிவபதமடைந்தார். இவரது திருக்கோவில் திருத்துறையூர்த் தலத்தில் உள்ளது. இவரது காலம் கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டாகும்.

## ஸ்ரீ அருணந்தியார் துதி

முப்பொருளின் ஈரியல்பும் ஓரியல்பாய்
நுவலாது முறை வெவ்வேறாய்ச்
செப்பு சிவாகமங்களின்றதன் பொருளொருமை
பெறவுணர்த்து திறமுன்னூலை
ஒப்பவிரி யாப்பதனாற் சித்தியெனும்
வழிநூலாய் ஒளிர் பிற்காலத்(து)
இப்புவியோர் தெளிந்துய்ய மொழிந்த
அருள்நந்திசிவன் இணைத்தாள் போற்றி.

## ஸ்ரீ மறைஞான சம்பந்தர்

சிறப்புக்கள் பலவும் கொண்ட நடுநாட்டிலே திருப்பெண்ணாகடம் என்னும் சிவத்தலம் உள்ளது. இத்தலத்தில் பூசை செய்யும் அந்தணர் குலத்தில் பரராசமுனிவரின் கோத்திரத்தில் தோன்றியவர் மறைஞானசம்பந்த சிவாச்சாரியார். இவர் சாம வேதியர் குலத்தைச் சேர்ந்தவர். வேதங்களை முறைப்படி நன்கு கற்று ஓதுபவர். இவர் அருணந்திசிவாச்சாரியாரைச் குருவாக ஏற்று அவரிடம் சைவ சித்தாந்தத் தத்துவங்கள் அனைத்தையும் கற்றவர். அதன்பின் மறைஞான சம்பந்தர் தில்லைக்குச் சென்று அங்கு விதிமுறை தவறாது சிவபூசை செய்து வந்தார்.

திருஞான சம்பந்தர், மறைஞான சம்பந்தர், குருஞான சம்பந்தர் என இப்பூவுலகில் மூன்று சம்பந்தர்கள் வாழ்ந்தனர். மறைஞான சம்பந்தர் சந்தணாச்சாரியார் நால்வருள் மூன்றாவதாகத் தோன்றியவர். இவர் வாழ்ந்த காலம் கி.பி பதின்நான்காம் நூற்றாண்டாகும்.

அருணந்தி சிவாச்சாரியாரிடம் சிவஞான உபதேசம் பெற்ற மறைஞான சம்பந்தர் சிவனை நினைத்துப் பல காலம் சிவயோக நிட்டையில் இருந்தார். இவரது

பெருமைகளைக் கண்டு வியந்த அவ்வூர் மக்கள் திரண்டு வந்து அவருக்கு வேண்டிய தொண்டுகளைச் செய்தனர். அவர் தனக்குத் தொண்டுகள் பலவும் புரியும் சிவனடியார்களுக்கு அருள் புரிந்து வந்தார். அத்துடன் நாட்டில் உள்ள பல்வேறு சிவத்தலங்களுக்கும் சென்று அங்குள்ள சிவனடியார்களைக் கொண்டு திருக்கோவில்களில் திருத்தொண்டுகள் பலவும் செய்விப்பார். அதிகநேரம் நிட்டையில் இருப்பார் அத்துடன் சிவனடியார்களுக்குத் தீட்சை செய்து அவர்களை மெய்யடியார்களாக்குவார். இறுதியாக அவர் சிதம்பரத்திற்குச் சென்று அங்கு நெடுங்காலம் நிட்டையில் இருந்தார்.

தில்லையில் மூவாயிரம் அந்தணர்கள் வாழ்ந்து வந்தனர். இவர்கள் சைவ சமயத்திற்கு அரும்பெருந்தொண்டாற்றியமையால் இவர்களது பெருமைகள் நூல்களில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. அத்தகைய பெருமை மிக்க அந்தணர்களுள் மிகவும் சிறப்புப் பெற்ற அந்தணர் உமாபதி சிவாச்சாரியாராவர். இவர் வேதங்களையும் உபநிடதங்களையும் ஆகமங்களையும் முறைப்படி கற்றுத் தேர்ந்தார். இவர் ஒருநாள் அடியார்கள் புடைசூழ மங்கள வாத்தியங்கள் இசைக்க மக்கள் மகிழ்வுடன் மலர்கள் தூவி வரவேற்கச் சிவிகையில் சென்றார். அவர் பெரும் வரவேற்புடன் பகலில் சென்ற போதும் பல தீப்பந்தங்கள் பக்தர்களால் பிடிக்கப்பட்டன.

அவர் பெருங்கூட்டத்துடன் வீட்டுக்குச் செல்லும் வழியில் மறைஞானசம்பந்தர் கங்கையில் நீராடி விட்டு வந்து, தில்லையில் கோவில் கொண்டிருக்கும் நடராசரை வணங்கிவிட்டு வெளியே வந்து ஒருபக்கத்தில் அமர்ந்திருந்தார். அவரைக் கண்டதும் நடராசரை வணங்கிவிட்டு வெளியே வந்த பக்தர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டனர். அப்போது மேள தாளங்களுடன் பல அடியார் புடைசூழ மிகமிக ஆடம்பரமான உடைகளை அணிந்து உமாபதிசிவாச்சாரியார் பல்லக்கில் சென்று கொண்டிருந்தார். பல அடியார்கள் தீப்பந்தம் பிடித்துக் கொண்டு சென்றனர். அவருக்கு அருள் செய்ய வேண்டும் என்று மனதுள் நினைத்தார் மறைஞானசம்பந்தர். ஆடம்பரமும் அலங்காரமும் மிகவும் ஆபத்தான பற்றுக்கள். அவற்றை விரும்பும் வரை இறைவன் அன்னியப்பட்டே இருப்பான். அதனால் அதை உமாபதிசிவாச்சாரியாருக்கு உணர்த்த வேண்டும் என்று நினைத்தார். அதனால் அவர் தனது சீடர்களுக்கு விடகமாகச் சொன்னார், ‘‘பாருங்கள், பட்டகட்டையில் பகற்குருடு செல்வதைப் பாருங்கள்’’. அதைக் கேட்ட உமாபதிசிவாச்சாரியார் பதட்டப்பட்டுச் சிவிகையால் இறங்கி மறைஞானசம்பந்தர் இருக்கு மிடத்திற்கு ஓடோடிவந்து அவரது பாதங்களைத் தொட்டு வணங்கி,‘‘சுவாமி தாங்கள் சொன்னதன் அர்த்தம் எனக்குப் புரியவில்லை அதைத் தயவு செய்து விளக்கமாகக் கூறுங்கள்’’ என்று பணிவுடன் கேட்டார்’’

“மகனே. பட்டகட்டையால் செய்யப்பட்ட சிவிகையைச் சொன்னேன். இரவில் தான் தீப்பந்தத்துடன் மக்கள் செல்வார்கள். பட்டப்பகலில் சூரியனின் பேரொளி உள்ள வேளையில் யாராவது விளக்குடன் செய்வார்களா? உன்னுடைய தகுதியையும் கல்வியறிவையும் மக்களுக்குத் தெரிவிப்பதற்காக மிக்க அலங்காரத்துடனும் ஆணவத்துடனும் செல்கிறாய். உன்னை மதித்துப் பலர் உன்னைப் போற்றித் துதிக்கின்றனர். இது ஆத்ம விடுதலைக்கு விரோதமானது. ஆடம்பரமும் பகட்டும் இறைவனை அன்னியப்படுத்தும். கல்விச் செருக்கும் ஒரு வகையில் பற்றுத்தான். அது செருக்கை உண்டாக்கும். ஆணவத்தின் தன்மையைக் குறிக்கும். கடவுளை வணங்க இவ்வளவு ஆடம்பரம் தேவையில்லை. பட்டகட்டை என்பது இந்த உலகைக் குறிப்பது. தேவையிருக்கும் வரை எல்லோரும் சூழ்ந்து கொள்வர். தேவைமுடிந்ததும் விலகிவிடுவர். உலகம் எப்படிப்பட்ட கட்டையோ, அது போல உடலும் பட்ட கட்டைதான். நீ கல்விகற்றவன். பகலில் செல்ல ஏன்வெளிச்சம். அது உனது தகுதியை வெளிப்படுத்துமா? பகலில் சூரிய ஒளியைத் தவிர வேறு எந்த ஒளியும் ஒளியைத் தராது என்று கற்ற உன்னால் அறிந்து கொள்ள முடியவில்லையென்றால் உனது கல்வியறிவால் உனக்கே பயன் இல்லை என்று அர்த்தம். அப்படியிருக்க அது பிறருக்கு எவ்வாறு பயன்படும். ஒரு செயல் தனக்கும் பிறருக்கும் பயன்படாதவிடத்து அச் செயலைச் செய்யாது விடுவதுதான் புத்தி சாலித்தனம்” என்றார் மறைஞான சம்பந்தர்.

மறைஞான சம்பந்தரின் ஒவ்வொரு சொல்லும் உமாபதி சிவாச்சாரியாரை வேல்போலத் தாக்கியது. அதனால் அவரது மனதில் படிந்திருந்த ஆணவ இருள் விலகியது.

அதனால் மறைஞான சம்பந்தரை வணங்கிய உமாபதி சிவாச்சாரியார், தன்னைச் சீடராக ஏற்றுக் கொள்ளும் படி வேண்டினார். மறைஞானசம்பந்தர் அதை ஏற்றுக் கொண்டார். அதன்பின் உமாபதி சிவாச்சாரியார்தான் அணிந்திருந்த பெறுமதி வாய்ந்த உடைகளையும் ஆபரணங்களையும் களைந்து விட்டுச் சாதாரணமாகச் சிவனடியார்கள் அணியும் உடையை அணிந்து கொண்டு மறைஞானசம்பந்தரோடு இருந்து திருத்தொண்டுகள் பலவும் செய்து வந்தார்.

## உமாபதி சிவாச்சாரியாரின் பக்குவம் வெளிப்படல்

உமாபதி சிவாச்சாரியார் அவரோடு இருந்து திருத்தொண்டுகள் பலவும் செய்து வந்தார். அவரது பக்குவ நிலையை உலகிற்கு வெளிப்படுத்த நினைத்த மறைஞான சம்பந்தர் ஒருநாள் செங்குந்தர்கள் வாழும் தெருவால் சென்றார். அவரோடு எந்நேரமும் கூடச் செல்லும் உமாபதி சிவாச்சாரியார் இறைவனின் நினைவோடு அவரைப் பின் தொடர்ந்து சென்றார்.

உமாபதி சிவாச்சாரியாரின் பக்குவநிலையை வெளிப்படுத்த எண்ணிய மறைஞானசம்பந்தர், தனக்குக் கடும் பசி ஏற்பட்டு விட்டதாக உமாபதி சிவாச்சாரியாருக்குக் கூறி ஒரு நெசவு நெய்பவனிடம் சென்று தனது பசியைத் தீர்த்து வைக்குமாறு வேண்டினார். அவன் முதலில் தயங்கினான். பின் அடியவர் ஒருவரின் பசியை நீக்காவிட்டால் பாவம் வந்து சேரும் என்று நினைத்து அவன் தாம் காய்ச்சிய கூழை பயபக்தியுடன் கொடுக்க மறைஞானசம்பந்தர் இருகைகளையும் ஒன்றாக்கி அவனுக்கு நேரே பிடிக்க அவன் கூழைக் கையில் ஊற்றினான். மறைஞான சம்பந்தர் கூழைக் சுவைத்துக் குடித்தார். அப்போது மறைஞானசம்பந்தரின் கைகள் வழியாக வழிந்த கூழ் முழங்கை வழியாக நிலத்தில் விழ ஆரம்பித்தது. உடனே உமாபதிசிவாச்சாரியார் தனது இரண்டு கைகளாலும் அதை ஏந்திக் குடித்தார். அப்போது, "இது குருவின் பிரசாதம் குருவின் சற்பிரசாதம்" என்று மகிழ்வுடன் சொல்லிச் சொல்லிக் குடித்தார்.

மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாச்சாரியாரின் பக்குவ நிலையை உணர்ந்து மிக்க மகிழ்ச்சியடைந்தார். ஒரு பிரமாணன் நெசவாளி கொடுத்த கூழைக் குடிக்கிறான். அதுவும் இன்னொருவர் குடித்த எச்சில் கூழ் என்று நினையாது அது அமிழ்து என்று நினைத்துக் குடித்த உமாபதிசிவாச்சாரியரின் குரு பக்தியைக் கண்டு அவரது மெய்சிலிர்த்தது. அதனால் தனக்கு ஒரு சிறந்த உத்மமாக சீடர் கிடைத்து விட்டாரென்று அறிந்து மகிழ்ந்தார். உரிய நாளில் அவருக்குச் சிவஞானதீட்சை அளித்துச் சிவஞானபோதப் பொருளையும் உபதேசித்தார்.

மறைஞான சம்பந்தர் இயற்றிய நூல்களைப் பற்றிய குறிப்புக்கள் எவையும் காணப்படவில்லை. ஆனால் சில நூல்களில் அதைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. இவர் சதமணிக்கோவை என்ற நூலை இயற்றியுள்ளார். அது போன்ற சில நூல்களையும் இயற்றியதாகக் குறிப்புக்கள் உண்டு. இவர் இயற்றிய, 'சிவதரு மோத்திரம்' என்ற நூலும், 'சைவசமய நெறி' என்ற நூலும் சிறப்பானவை என்று சைவசமயத்தவர்கள் கூறுகின்றனர். சைவசமய நெறி எண்ணூற்று இருபத்தைந்து குறட்பாக்களால் ஆனது. இந்நூல் இலக்கணம், சீடர் இலக்கணம், பொது இலக்கணம் என்ற மூன்று பகுதிகளை உடையது.

முதலாவதாகக் கூறப்பட்ட ஆச்சாரியார் இலக்கணத்தில். குருவின் இலட்சணங்கள், அவரின் செயற்பாடுகள் பற்றியும், குருவாவதற்குத் தேவையான தகுதிகள் பற்றியும், என்னென்ன வகைத் தீட்சைகள் உள்ளன என்றும், அவற்றை எப்படிச் சீடர்களுக்கு வழங்குவது என்றும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

இரண்டாவதாக எழுதப்பட்ட சீடர் இலக்கணத்தில் சீடர்களின் தகுதிக்கேற்பத் தனித்தனியாகத் தீட்சை அளிப்பது, சிவாகம முறைப்படி சீடர்கள் செய்ய வேண்டிய நித்திய கருமங்கள் எவையெவையென்றும், அவற்றை எப்படிச் செய்வதென்றும், குருவுக்கு எவ்வாறு பணிவிடை செய்வதென்றும், சிவனடியார்களுக்குச் செய்யும் தொண்டுகளும், அவர்களை வழிபடும் முறைகளும் விபரமாகக் கூறப்பட்டுள்ளன.

மூன்றாவது அமைப்பான பொது இலக்கணத்தில் குருவுக்கு அத்தியாவசியமான சைவநெறிப்பற்று, சந்நியாசிகளும், இல்வாழ்வாரும் செய்ய வேண்டிய நித்தியகடமைகள், அவற்றைச் செய்யும் விதிமுறைகள், சிவபூசை செய்யும் முறைகள், உருத்திராக்கத்தின் மகிமை, அதை அணிவதால் ஏற்படும் பயன்கள், அதை எப்படி அணிவது, சிவாலய வழிபாட்டு முறைகள் என்பன இப்பகுதியில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

## இறைவனோடு சேர்தல்

அருளில் பிறந்திட்டு அருளில் வளர்ந்திட்டு
அருளில் அழுந்தி இளைப்பாறி மறைந்திட்டு
அருளால் ஆனந்தத்து ஆரமுது ஊட்டி
அருளால் என் நத்தி அகம் புகுந்தானே.

என்ற திருமந்திரத்தின் வாக்குப்படி வாழ்ந்த மறைஞான சம்பந்தர் தனது வாரிசாக உமாபதி சிவாச்சாரியாரை நியமித்து அவரிடம் பொறுப்புக்களை ஒப்படைத்து விட்டுத் திருக்காளஞ்சேரி என்ற சிவத்தலத்தை அடைந்து, ஆவணி உத்தர நன்நாளில் சிவனது திருவடியை அடைந்தார்.

வாய்ந்த புகழ் மெய்கண்ட தேவருக்கு
மாணாக்கர் அருணந்தி தேவர் தம்பால்
ஆய்ந்த பல கலை ஓதித் தமை அடைந்த
அருள் பெருகு கொற்றவன் குடியில் வாழும்
காய்ந்த பவத்து உமாபதி தேவருக்கு ஞானம்
கவின உரைத்து அருள் செய்யும் கடந்தை வந்த
ஏய்ந்த தவத்து உயர்ந்த மறைஞான தேவர்
இணை மலர்த்தாள் எஞ்ஞான்றும் இறைஞ்சுவாமே.

கடந்தைப் புராணம் அவரது சிறப்பை இவ்வாறு கூறுகிறது.

## ஸ்ரீ மறைஞான சம்பந்தர் துதி.

பார்திகழ வளர்சாம வேதம் மல்கப்

பாராசர மாமுனி மரபு பயில ஞானச்

சார்புதர வந்தருளி எம்மை ஆண்ட

சைவசிகாமணி மருதைத் தலைவன் அந்தண்

கார்மருவு பொழில் புடைசூழ் மதில்மீதே மதியங்

கடவாமை நெடுங்கொடியின் கரந்தகையுங் (கடந்தைச்)

சீர்நிலவு மறைஞான சம்பந்தன் எந்தை

திருவளரும் மலரடிகள் சென்னி வைப்பதாம்.

## ஸ்ரீ உமாபதி சிவாச்சாரியார்

சைவசமய சந்தானாசாரியார்களுள் நான்காவதாகப் போற்றப்படுபவர் உமாபதி சிவாச்சாரியார் ஆவர். இவர் கி.பி பதின்நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

இவர் சிதம்பரத்தில் அந்தணர் குலத்தில் வத்சகோத்திரத்தில் பிறந்தார். இவருடைய தந்தையாக சம்புதீட்சிகர், தயார் கௌரி அம்பாள். இவர் பிறந்த போது முகத்தில் ஓர் ஒளிதென்பட்டதால் இவருக்கு உமாபதி சிவன் என்ற நாமத்தைப் பெற்றோர் சூட்டி சைவசமய முறைப்படி அன்போடு வளர்த்து வந்தனர். உரிய வயதில் பெற்றோர் இவருக்கு உபநயனம் செய்து வைத்தனர். இவர் வடமொழியிலும் தமிழ்மொழியிலும் மிக்க பாண்டித்தியம் பெற்றார். சிறுவயதிலேயே வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், சைவசித்தாந்த தத்துவங்கள் அனைத்தையும் கற்றுப் பாண்டித்தியம் பெற்றவராகத் திகழ்ந்தார்.

அவருக்குத் திருமண வயது வந்ததும் பெற்றோர் அவருக்கேற்ற குணவதியான பார்வதி என்ற பெண்ணை மணம் முடித்து வைத்தனர். அவர் சைவசித்தாந்த முறைப்படி விதிவழுவாது சைவஅனுட்டானங்கள் அனைத்தையும் செய்து வந்தார். தனது இருபத்தாறாவது வயதில் மகாவிரதம் என்றொரு மிகப் பெரிய யாகத்தைச் செய்தார். அந்த யாகத்தின் மகிமையைக் கண்டு வியப்புடன் மகிழ்வடைந்த தேவர்களின் தலைவனான இந்திரன் யாகம் நடைபெற்ற இடத்திற்கு வந்து உமாபதிசிவாச்சாரியாருக்குத் தரிசனம் கொடுத்து, தனக்குத் தரவேண்டிய அவிப்பாகத்தைத் தருமாறு கையை நீட்டினான்.

உமாபதி சிவாச்சாரியார் அவி உணவைக் கொடுக்காது, ‘‘சுவாமி அவியுணவைத் தேவர்களுக்குக் கையில் கொடுப்பது வழக்கமல்ல. வழக்கப்படி அவி உணவை அக்கினியில் இட வேண்டும். அதனால் அக்கினியில் இடுகிறேன். அதைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறி அவி உணவை அக்கினியில் இட்டார் உமாபதி சிவாச்சாரியார்.

அதைக் கேட்ட தேவர்களின் தலைவனான இந்திரன், ‘‘சிவாச்சாரியாரே, விதிப்படி இன்றுடன் உமது விதி முடிவடைகிறது. அதைப் பரிசோதிப்பதற்காகச் சிவனின் அருளாசியுடன் இங்கு வந்து இவ்வாறு நடந்து கொண்டேன். இன்றுமுதல் உமது ஆயுள் ஐம்பது ஆண்டுகளால் அதிகரிக்கப்படுகிறது. ஏன் தெரியுமா? நீர் வைதீக தத்துவங்களை உருவாக்கிச் சைவசமயத்தை மேன்மை அடையச் செய்து சைவசித்தாந்தத் தத்துவங்களை உருவாக்குவீராக. அதற்குத் தேவையான சத்தி முழுவதையும் பரமசிவனின் ஆணைப்படி நான் உமக்கு வழங்குகிறேன்’’ என்று கூறி இந்திரன் மறைந்தான்.

அதன்பின் உமாபதி சிவாச்சாரியார் திருக்கைலாயம் சென்று சிவபெருமானைத் தரிசித்து, அவரிடம் அருளாசி பெற்றார். பின்பு கயிலாயத்தில் இருந்த யோகிகளையும், சித்தர்களையும், முனிவர்களையும் கண்டு தரிசித்து, அவர்களிடமும் ஆசி பெற்றுக் கொண்டு பூவுலகிற்குத் திரும்பி வந்தார்.

உமாபதி சிவாச்சாரியார் மறைஞான சம்பந்தரின் சீடராகி, அவருக்குச் செங்குந்தர்கள் வார்த்த கூழைக் குடிக்கும் போது அவரின் கையால் வழிந்த கூழை உமாபதி சிவாச்சாரியார் ஏந்தி உண்டமையைத் தில்லையில் வாழ்ந்த மூவாயிரம் பிரமாணர்களும் அறிந்து அவர் குலமுறை தவறியவர் என்று பழித்துத் தமது சாதியில் இருந்து நீக்கியதோடு தில்லைக் கூத்தப் பெருமானுக்கு அவர் சிவபூசை செய்யத் தகுதியற்றவர் என்று மூவாயிரம் பிராமணர்களும் ஒன்றுகூடித் தீர்மானமெடுத்தனர். அதனால் உமாபதி சிவாச்சாரியார் தில்லைக்கு அருகில் இருந்த கொற்றவன்குடி என்ற சிவத்தலத்திற்குச் சென்று அங்கே ஒரு மடம் அமைத்துத் தங்கினார். அதைக் கண்ட அடியவர்கள் பலர் தில்லையிலிருந்து புறப்பட்டு வந்து உமாபதிசிவாச்சாரியாரோடு இருந்து கொற்றவன்குடிச் சிவத்தலத்தில் முறைப்படி சிவபெருமானை வழிபட்டு வந்தனர். தன்னை நாடி வந்த தகுதியான சீடர்களுக்கு உமாபதி சிவாச்சாரியார் சைவசித்தாந்தத்தை முறைப்படி போதித்து வந்தார்.

## அரவம் தீண்டல்

ஒருநாள் உமாபதி சிவாச்சாரியாரின் சீடன் ஒருவன் நந்தவனத்தில் குரு சிவபூசை செய்வதற்காகப் பூப்பறித்துக் கொண்டிருந்தான். அப்போது அந்த வழியால்

வந்த ஒரு முனிவர் பூப்பறித்துக் கொண்டிருக்கும் உமாபதி சிவாச்சாரியாரின் சீடனைப் பார்த்தார். அவனது முகத்திலிருந்து ஒரு தெய்வீக ஒளி வீசிக் கொண்டிருந்தது. உடனே அவர் அவனருகே வந்து, "யார் நீ? நான் கேட்கும் கேள்விகளுக்குச் சரியான விடையைக் கூறு. சரியான விடையைச் சொல்லாவிட்டால் நான் உன்னைச் சபித்து விடுவேன்" என்று எச்சரித்தார்.

சீடன் அதனைக் கவனத்தில் எடுக்கவில்லை, "இவருடன் பேசிக் கொண்டிருந்தால், குரு செய்யும் சிவபூசைக்குக் காலம் கழிந்துவிடும். அதனால் குரு மனம்வருந்துவார். எந்த வல்லவனும் எனது குருவுக்குக் கீழானவன்தான். தேவர்களின் தலைவனான இந்திரனுக்கே அஞ்சாத எனது குருவை உவரால் என்ன செய்ய முடியும்?" என்று நினைத்துப் பூக் கூடையுடன் அவன் சென்று கொண்டிருந்தான்.

முனிவருக்கு அடக்க முடியாத கோபம் வந்தது. "அற்பப்பயலே, பெருந்தவம் செய்த முனிவனான நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீ அதைக் கேளாது அலட்சியத்துடன் சென்று கொண்டிருக்கிறாய். நீ எந்தக் குருவுக்காக என்னை மதிக்காது செல்கிறாயோ, அந்தக் குருவின் முன் நீ பாம்பு தீண்டி இறப்பாய்?" என்று சபித்தார்.

அவரது சாபத்தைக் கேட்டுக் கலங்காத சீடன் தனது குருவின் மீதுள்ள நம்பிக்கை காரணமாக விரைந்து சென்று பூக்களைக் கொடுத்து விட்டு முனிவர் சொன்னதைச் சொன்னான்.

அதைக் கேட்ட உமாபதி சிவாச்சாரியார், "பயப்படாதே உன்னைத் தீண்டும் பாம்புதான் சாகும். நீ சாகமாட்டாய்" என்றார்.

அப்போது அங்கே வந்த கொடிய நாகம் சீடனைத் தீண்டியது. அவனைத் தீண்டிய மறுகணம் அப்பாம்பு உயிரிழந்தது. சீடன் எதுவும் நடவாததால் சிரித்துக் கொண்டு நின்றான்.

சீடனைத் தீண்டி இறந்த நாகம் திடீரென்று ஒரு சந்நியாசியாக உருமாறி உமாபதிசிவாச்சாரியாரை வணங்கி, "சுவாமி, நான் முற்பிறப்பில் அறியாமைகாரணமாக சைவ சமயத்தையும், அதன் கடவுளான சிவனையும் நிந்தனை செய்து வந்தேன். அத்துடன் அது பற்றிச் சில நூல்களையும் எழுதி வெளியிட்டேன். இதனால் கோபங் கொண்ட சுவேதாச்சாரியார் என்ற முனிவர் என்னை அரவமாக மாறும்படி சபித்தார். தங்களது பெருங் கருணையினால் எனக்கேற்பட்ட நிலை மாறிவிட்டது. நான் நல்வாழ்வு பெற ஆசீர்வதியுங்கள்" என்று கேட்டான். அதனால் மனம் மகிழ்ந்த உமாபதி சிவாச்சாரியார் அவனுக்குப் பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசம் செய்து அதைத்

தொடர்ந்து செபித்து வாருமாறு சொன்னார். அதன் பின் அவன் பஞ்சாட்சர மந்திரத்தைத் தினமும் செபித்து இறுதியில் சிவபதம் அடைந்தான்.''

இன்னொரு முறை ஒரு மந்திரவாதி அவ்வூர்ச்சிவன் கோவிலில் நடைபெற இருந்த கும்பாவிஷேகத்தைத் தனது மந்திர சக்தியின் வலிமையால் தடுத்து அவ்வூர் மக்களைக் கொடுமைப்படுத்தி வந்தான். அதை அறிந்த உமாபதி சிவாச்சாரியார் அவ்வூருக்குச் சென்று அம்மந்திரவாதியின் மந்திர சக்தியை அழித்துக் கும்பாவிஷேகத்தைச் சிறப்பாகச் செய்து முடித்தார்.

அதன்பின் ஒர் அரச குமாரன் பிறக்கும் போதே அலியாகப் பிறந்தான். அதனால் அரசனும் அரசியும் பெருந்துன்பப்பட்டனர். அவர்கள் உமாபதி சிவாச்சாரியாரிடம் அதை மிக்க கவலையோடு முறையிட்டனர். அதனால் மனமிரங்கிய உமாபதி சிவாச்சாரியார் தனது சக்தியினால் அந்த இராச குமாரனின் அலித்தன்மையை நீக்கயருளினார்.

சிதம்பரக் கோவிலின் மேலைக் கோபுர கற்பகவிநாயகர் சந்நிதிக்கு எதிரே ஒரு வில்வை மரத்தையும், வடக்குக் கோபுரத்துக்கு அருகே தீய சக்திகளை அடக்குவதற்காக 'ஜடாதரர்' என்ற முனீச்வரரையும் உமாபதி சிவாச்சாரியார் அமைத்தார்.

## கோவில் தடை நீக்கம்

தில்லைத்தலத்தில் ஒவ்வொரு பிராமணர்களுக்கும் சில நாட்கள் பூசை உரிமை உண்டு. அவ்வுரிமையான நாட்களில் பூசைக்குரிய பிராமணர் பூசை செய்வது வழக்கம். அது ஒரு ஒழுங்கில் வரும். அன்று உமாபதி சிவாச்சாரியாரின் பூசை முறை, உமாபதி சிவாச்சாரியார் தில்லைக் கூத்தனுக்குப் பூசை செய்வதற்காகக் கோவிலுக்கு வந்த போது அவரைக் கோவிலுள்ச் செல்ல விடாது தில்லைப் பிராமணர்கள் தடுத்தனர். உமாபதி சிவாச்சாரியார் எதுவும் பேசாது சிவநினைவோடு திரும்பிச் சென்று தான் வழமையாகத் தங்கும் மடத்தில் தங்கியிருந்தார்.

ஏனைய பிராமணர்கள் கோவிலுக்குச் சென்று பெட்டகத்தைத் திறந்து பார்த்தனர். பெட்டகத்துள் முதல்நாள் பூசை செய்து விட்டுவைத்த எம்பெருமானின் திருவுருவைக் காணவில்லை. அப்போது ஆகாயத்தில் ஓர் அசரீதி வாக்கு எழுந்தது, ''நம்மைப் பூசிக்கத்தகுந்தவர் உமாபதி சிவம் மட்டுமே. அவனிடம் நாம் சென்று விட்டோம்'' என்ற வாக்கு அனைவர்க்கும் கேட்டது. அதனால் அச்சமடைந்த பிராமணர்கள் உமாபதிசிவாச்சாரியார் தங்கியிருந்த மடத்திற்கு வந்தனர். இறைவன் அசரீதியாகச்

சொன்னவாக்கைச் சொல்லித் தமது செயலுக்காக வருந்தி மன்னிப்புக் கேட்டனர். அதன் பின் உமாபதிசிவாச்சாரியார் கோவிலுக்கு வந்து முறைப்படி பூசை செய்தார். பின்பு கொற்றவன் குடிக்குவந்து தங்கியிருந்தார்.

## சாம்பானுக்கும் முள்ளிச்செடிக்கும் முத்தி கொடுத்தது

திருவிடைமருதூரில் ஒரு பிராமணர் வாழ்ந்து வந்தார். அவர் வேதம், உபநிடதம், ஆகமம். சைவசித்தாந்தம் ஆகியவற்றை நன்கு கற்றுத் தேர்ந்தவர். வைதீக அனுட்டானம் மிக்கவராக இருந்த அவர் சிவபெருமானிடத்தில் அளவிடமுடியாத பக்தியை வைத்திருந்தார். இருப்பினும் அவர் செய்த வினையின் காரணமாகக் கௌரிப்பற்று என்ற ஊரில் நீசர் குலத்தில் பிறந்து வளர்ந்து வந்தார். அவரைச் சூதன் என்றும் பெற்றான். சம்பான் என்றும் ஊர்மக்கள் அழைத்தனர். முற்பிறப்பில் ஒழுங்காக வேத உபநிடதங்களைக் கற்று இறைவன் மீது மட்டற்ற அன்பு கொண்டமையால் அவர் பக்குவமடைந்த ஞானியைப் போல வாழ்ந்து வந்தார்.

பெற்றான் சாம்பன் எந்நேரமும் சிவநினைவாகவே இருந்தான். சிவசேவை செய்வதும் சிவனை வணங்குவதுமே அவனது தொழிலாக இருந்தது. ஒருநாள் தில்லை நடராசப் பெருமான் பெற்றான் சாம்பனின் கனவில் தோன்றினார். அதனால் பெற்றான் சாம்பானின் மல இருள் நீங்கியது. அதனால் கூத்தப் பெருமானை பலமுறை வணங்கி மகிழ்ந்தான். அப்போது சிவபெருமான், சாம்பனின் கனவில் வந்து, ‘‘சாம்பனே, நீ உடனே சிதம்பரத்திற்கு வந்து, அங்குள்ள புலிமடுவில் நீராடி, திருநீறும் உருத்திராக்கமும் தரித்துத் திருவீதிவலம் வந்து, திருக்கோவிலில் உள்ள மடப்பள்ளிக்கு விறகு கொண்டுவந்து கொடுத்து உதவுக’’ என்று சிவபெருமான் கூறி மறைந்தார்.

திடுக்கிட்டுக் கண்விழித்த சாம்பன் சிவபெருமான் கூறியதைக் கேட்டு அளவில்லாத, மகிழ்ச்சியடைந்து, சிதம்பரத்தலத்துக்குச் சென்று புலிமடுவில் நீராடி. வீதிவலம் வந்து நடராசப் பெருமானை வணங்கிவிட்டுத் தினமும் மடப்பள்ளிக்குப் பக்தி சிரத்தையுடன் விறகு கொண்டு சென்று கொடுத்து வந்தான். அவன் விறகு கொடுப்பதைப் பல ஆண்டுகாலம் செய்து வந்தான்.

ஒருநாள் அவன்தான் வெட்டிய விறகுகளைத் தோளில் சுமந்தவாறு மடப்பள்ளியை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது சாம்பன் முன்பு நடராசப் பெருமான் ஒரு சந்நியாசி உருவத்தில் அவன் முன் தோன்றி, ‘‘அடியவனே, கொற்றவன்

குடியில் வசிக்கும் உமாபதி சிவாச்சாரியாரின் வீட்டுக்கும் விறகு கொண்டு சென்று கொடு'' என்று சொல்லி மறைந்தார்.

அதைக் கேட்டு அதிசயித்த சாம்பன் மிக்க மகிழ்வுடன் உமாபதி சிவாச்சாரியாரின் வீட்டுக்கும் விறகைக் கொடுத்து வந்தான் இந்த விடயம் உமாபதி சிவாச்சாரியாருக்குச் சமைத்துக் கொடுக்கும் தபசுப் பிள்ளைக்கு மட்டுமே தெரியும்.

இவ்வாறு பல ஆண்டுகாலம் சாம்பான் சிதம்பர மடப்பள்ளிகும், உமாபதி சிவாச்சாரியாரின் வீட்டுக்கும் விறகு கொண்டு சென்று கொடுத்து வந்தான். ஒருநாள் பெருமழை பெய்தமையால் சாம்பனால் உரிய நேரத்திற்கு விறகைக் கொண்டு சென்று உமாபதி சிவாச்சாரியாரின் மடத்திற்குக் கொடுக்க முடியவில்லை. இதனால் பூசைக்குரிய நைவேத்தியத்தைத் தபசுப் பிள்ளை தாமதித்தே கொண்டு வந்து வைத்தான். கறிவகைகள் எவையும் சமைக்கப்படாமையால் அன்று சோறு மட்டுமே வைக்கப்பட்டிருந்தது. அதைக் கண்ட உமாபதிசிவாச்சாரியார், ‘‘இன்று ஏன் கறிகள் சமைக்கப்படவில்லை'' என்று கேட்கத், தபசுப்பிள்ளை, ‘‘சுவாமி, தயவு செய்து இன்று தனியே சோற்றுடன் பூசை செய்யுங்கள். பின்பு நடந்தவற்றைக் கூறுகிறேன்'' என்றான்.

அதைக் கேட்ட உமாபதிசிவாச்சாரியார் பூசையை முடித்துவிட்டு உணவை உண்டபின் சீடர்களுக்குக் கற்பிக்கத் தொடங்கினார். அப்போது அங்கு வந்த தபசுப்பிள்ளை,‘‘சுவாமி, நந்தனார் அவதரித்த குலத்தில் பிறந்த ஒருவர் கடந்த ஐம்பத்தைந்து ஆண்டுகளாக எமது மடத்திற்கும், சிதம்பரக் கோவிலின் மடப்பள்ளிக்கும் விறகு கொண்டு வந்து தரும் புனிதப்பணியைச் செய்து வருகிறார். இன்று பெருமழை பெய்தமையால் அவரால் விறகு கொண்டு வந்து தரமுடியவில்லை'' என்றார்.

‘‘நாளைக்கு அவர் விறகு கொண்டு வந்து போட்ட பின்பு என்னிடம் அழைத்து வாருங்கள்'' என்றார் உமாபதிசிவாச்சாரியார்.

மறுநாள் சாம்பன் விறகுகளைச் சுமந்து கொண்டுவரும் போது இறைவன் முன்பு போல ஒரு சந்நியாசி வேடந் தாங்கி வந்து தன்கைபட எழுதிய ஒரு கவிதையைச் சாம்பானிடம் கொடுத்து, ‘‘அன்பனே, இதைக் கொண்டுசென்று உமாபதிசிவாச்சாரியாரிடம் கொடு'' என்று சொன்னார்.

சாம்பன் விறகு கட்டை மடதில் உள்ளமடப்பள்ளியில் போட்டுவிட்டுச் சமையல் காரனான தபசுப்பிள்ளையிடம் வந்து வழியில் ஒரு சந்நியாசி வந்து, ஒரு சீட்டைத் தந்ததைக் கூறி அதை தபசுப்பிள்ளையிடம் கொடுத்து உமாபதி சிவாச்சாரியாரிடம் கொடுக்குமாறு கூறினான்.

தபசுப்பிள்ளை சாம்பான் கொடுத்த ஏட்டைக் கொண்டுசென்று உமாபதி சிவாச்சாரியாரை வணங்கி நடந்த சம்பவங்களைக் கூறிவிட்டு ஏட்டைக் கொடுத்தான் அதில்,

"அடியார்க்கு எளியன் சிற்றம்பலவன் கொற்றங்
குடியாற்கு எழுதிய கைச்சீட்டுப் பாடியின் மிசைப்
பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கை செய்து
முத்தி கொடுக்க முறை"

என்று எழுதப்பட்டிருந்தது.

சீட்டைப் படித்த உமாபதி சிவாச்சாரியார் இறைவனின் கருணையை எண்ணிக் கசிந்து உருகினார். "எனது அடியவன் பெற்றான் சாம்பானுக்கு தீட்சை செய்து, முத்தி கொடுத்தருள்" என்று இறைவன் எழுதிய வாக்கியத்தைத் திரும்பத் திருப்பப் படித்து மெய்சிலித்தார். சாம்பன் மீது இறைவன் வைத்த பாசத்தை எண்ணி மெய்யுருகிக் கண்ணீர் வடித்தார். பின்பு பெற்றான் சாம்பானை அழைத்து வரச் சொல்லி அவனைத் தனது ஞானக்கண்ணால் பார்த்துத் தீட்சையும் உபதேசமும் செய்தருளி, முத்தியும் கொடுத்தார்.

இரவாகியும் பெற்றான் சம்பான் வீடு செல்லாமையால் அவனது மனைவியும் மக்களும் சுற்றத்தவர்களும் உமாபதி சிவாச்சாரியாரின் மடத்துக்குச் சென்று விசாரித்தனர். உமாபதி சிவாச்சாரியார் நடந்தவற்றைச் சொன்ன போது அவர்கள் அதை நம்பாது சோழ அரசனிடம் சென்று புகாரிட்டனர்.

சோழ மன்னன் உமாபதி சிவாச்சாரியாரின் மடத்திற்கு வந்து, நடந்தது என்ன என்பதை அனவைருக்கும் தெரியப்படுத்துங்கள். என்று பணிந்து நின்றான்.

உமாபதி சிவாச்சாரியார், நடராசப் பெருமானின் திருமஞ்சக நீர் தினமும் பட்டுப் பரிபக்குவம் அடைந்து நின்ற முள்ளிச் செடியை அருள் நிறைந்த கண்களால் அருள்பொங்கப் பார்த்தார். சாபத்தினால் முள்ளிச் செடியாக இருந்த அரக்கன் ஒருவன் உமாபதி சிவாச்சாரியாரின் அருட் பார்வையால் ஒளிமயமாகி மேலே சென்று கொண்டிருந்ததை எல்லோரும் நேரில் கண்டு அதிசயித்துத் தமது அறியாமையை எண்ணி வருத்தினர்.

"உமாபதி சிவாச்சாரியாரின் அருட்பார்வையில் முள்ளிச்செடி முத்தியடைந்தது போலப் பெற்றான். சாம்பானும் முத்தியடைந்து விட்டான்". என்றான் மன்னன். அதை எல்லோரும் ஏற்றுக் கொண்டனர். அதன் பின் அனைவரும் சிதம்பரத்துக்குச் சென்று

நடராசப் பெருமானைத் தரிசித்த போது கர்ப்பக்கிரகத்தில் இரு ஒளி வட்டங்கள் தோன்றின. ஒன்றில் சாம்பானின் உருவமும், மற்றதில் முள்ளிச் செடியின் உருவமும் அவர்களுக்குத் தெரிந்தது. சோழ மன்னன் உமாபதி சிவாச்சாரியாரின் பெருமையை உணர்ந்து சிரம் தாழ்த்தி வணங்கினான். மக்கள் அவரது செயலை எண்ணி வியப்புற்றனர்.

## கொடியை ஏற்றுவித்தல்

தில்லை நடராசப் பெருமானின் திருவிழா தொடங்கியது. அன்று கொடியை ஏற்றி வைக்க வேண்டிய பொறுப்பு உமாபதி சிவாச்சாரியாருக்கே வழங்கப்பட்டிருந்தது. ஆனால் தில்லைவாழ் அந்தணர்கள் பொறாமை காரணமாக அதை விரும்பாது வேறொரு சிவாச்சாரியாரைக் கொண்டு கொடியை ஏற்ற முயன்றனர். கொடி கொடித்தம்பத்தை விட்டு மேலே செல்லாது கட்டப்பட்ட இடத்திலேயே அசையாது நின்றது. பலமுறை முயன்றும் கொடி அசையாததைக் கண்ட அந்தணர்களும் மக்களும் பெரும் துயருற்றனர். பலமுறை கொடியை ஏற்ற முயற்சித்தும் அது ஏறாமையால் ஏதோ தவறு நடந்துவிட்டது. என்று பலரும் நினைத்தனர். அப்போது, ''உமாபதி சிவாச்சாரியாரைக் கொண்டு கொடியை ஏற்றுங்கள்'' என்று ஓர் அசரீதி வானில் இருந்து ஒலித்தது அதனால் திகைப்புற்ற அந்தணர்கள் கொற்றவன் குடிக்குச் சென்று நடந்தவற்றைக் கூறிச் சிதம்பரத்திற்கு வந்து கொடியை ஏற்றுமாறு உமாபதி சிவாச்சாரியாரை இரந்தனர்.

உமாபதி சிவாச்சாரியார் சிதம்பரத்திற்கு வந்து, கொடிமரமருகே சென்று கொடிக்கவியைப் பாடக் கொடி தானாகவே மேலெழுந்து சென்றது.

உமாபதி சிவாச்சாரியார் அதன் பின்பு பல சிவத்தலங்களுக்குச் சென்று பலமாணவர்களைச் சீடர்களாக ஏற்றுத் தகுதியானவர்களுக்குச் சிவதீட்சை செய்து வைத்து, சிவஞானபோதத்தையும் உபதேசித்து வந்தார். அவர் தனது எழுபத்தாறாவது வயதில் சித்திரை மாத அத்த நட்சத்திரத்தில் இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.

## உமாபதி சிவாச்சாரியார் எழுதிய நூல்கள்

1) சைவசித்தாந்த சாத்திர நூல்கள் பதின்நான்கினுள் எட்டு நூல்களை உமாபதி சிவாச்சாரியார் இயற்றியுள்ளார்.

    1. சிவப்பிரகாசம்
    2. திருவருட்பயன்
    3. வினாவெண்பா

4. போற்றிப் ப∴றொடை
5. உண்மை நெறி விளக்கம்
6. கொடிக்கவி
7. நெஞ்சு விடுதூது
8. சங்கற்ப நிராகரணம்

2) வடமொழியில் எழுதப்பட்ட பௌஷ்க, ஆகமத்திற்கு விரிவான உரையை எழுதினார்.
3) பலகிரந்தங்கள்
4) குஞ்சிதாங்கிறிஸ்தவம்
5) கோயிற் புராணம்
6) திருமுறைகண்ட புராணம்
7) திருத்தொண்டர் புராணம்
8) திருப்பதிக்கோவை

## இவரது பெருமைகள்

குறைவு இல் அருள் ஞான முதல் கொற்றங்குடி அடிகள்
நறை மலர்த் தாட்டு அன்பு பெற்று நாம் இருப்பது எந்நாளோ

என்று தாயுமான சுவாமிகள் உமாபதி சிவாச்சாரியாரைச் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

## உமாபதி சிவம் துதி

அடியார்க் கெளியன் எனத்தில்லை
அண்ணல் அருளுந் திருமுகத்தின்
படியே பெற்றான் சாம்பாற்குப்
பரம முத்தி அப்பொழுதே
உடலுங் கரைவுற் றதைத் திருவெண்
உயர்தீக் கையினை அருள்நோக்காற்
கடிதிற் புரிகொற் றங்குடியார்
கமல மலரின் கழல் போற்றி.

## சந்தனாச்சாரியார்களின் முத்தித் திருநாட்கள்

சித்திரை அத்தம் உமாபதி ஆவணித் திங்கள் தன்னில்
உத்திரம் சீர்கொள் மறைஞான சம்பந்தர் முது கன்னிச்
சுத்த மெய்ப்பூரம் அருணந்தி ஐப்பசிச் சோதி தன்னில்
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே.

திருச்சிற்றம்பலம்.